CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh. Funding by IKS-MoE-2025-Grant

शि० ७२

தமிழ் பிரவேசம்

"तमिऴ प्रवेश—नागरी लिपि" का पूरक

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh. Funding by IKS-MoE-2025-Grant

தமிழ் பிரவேசம்

[नागरी द्वारा तमिऴ् सीखनेवालों केलिये प्रकाशित
"तमिऴ् प्रवेश-नागरी लिपि" का पूरक]

ஆசிரியர் :
ரா. சங்கரன்,

நயீ தாலீம் வித்யாபீடம்
(சர்வசேவா சங்கம்)
சேவாகிராமம், வர்தா

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh. Funding by IKS-MoE-2025-Grant

अक्टोबर—'६७
அக்டோபர்—'67

मूल्य–५० पैसे
விலை 50 காசுகள்

Kabeer Printing Works, Madras (797)

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh. Funding by IKS-MoE-2025-Grant

தமிழ் பிரவேசம்

முதல் சரணம்

(1) முதல் பாடம்

நீ யார்?
நான் ராமன்.
அவன் யார்?
அவன் கோபாலன்.
அவன் பையன்.
அவன் மாணுக்கன்.
அவள் யார்?
அவள் கமலம்.
அவள் பெண்.
அவள் மாணவி.
அவர் யார்?
அவர் காமராஜர்.
அவர் ஆசிரியர்.
அது என்ன?
அது புத்தகம்.
அது பேனு.
அது நாய்.
அவர்கள் பையன்கள்.
அவர்கள் பெண்கள்.
அவர்கள் மாணுக்கர்கள்.
நீங்கள் யார்?

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh. Funding by IKS-MoE-2025-Grant

நீங்கள் வாத்தியார்.
நாங்கள் பெண்கள்.
அவைகள் புத்தகங்கள்.
அவைகள் நாய்கள்.

*　　*　　*

இவன் கோவிந்தன்.
இவன் தம்பி.
இவள் தங்கை.
இவர் பாரதியார்.
இவர்கள் பெண்கள்.
இது பூனை.
இது ஆடு.
இவைகள் என்ன ?

*　　*　　*

இவன் ராமனா ?
இல்லை, இவன் ராமன் இல்லை.
அவன் அண்ணனா ?
இல்லை, அவன் தம்பி.
அது பேனாவா ?
இல்லை, அது புத்தகம்.

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh. Funding by IKS-MoE-2025-Grant

(2) இரண்டாம் பாடம்

மோகன், நீ இங்கே வா.
ராமா, நீ உள்ளே வா.
கோபாலா, நீ அங்கே போ.
நீ பெஞ்சியில் உட்காரு.
கீழே உட்காராதே.
சீதா, எழுந்திரு.
புத்தகத்தை எடு.
பாடம் படி.
கோவிந்தா, புத்தகத்தை மேஜைமேல் வை.
மாமா, வாருங்கள்.
மாமா, உள்ளே வாருங்கள்.
நாற்காலியில் உட்காருங்கள்.
பால் பழம் சாப்பிடுங்கள்.

* * *

காலையில் எழுந்திரு.
பல் தேய் (துலக்கு).
முகம் கழுவு.
கடவுளை வணங்கு.
பால் சாப்பிடு.
பாடங்களை படி ; எழுது.
பள்ளிக்கூடம் போ.
மாலையில் விளையாடு.
ஓடி விளையாடு, பாப்பா.
நீ கூடி விளையாடு, பாப்பா.
குழந்தையை வையாதே, பாப்பா.

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh. Funding by IKS-MoE-2025-Grant

(3) மூன்றும் பாடம்

பரதன் ராமனுடைய தம்பி.

பலராமன் கிருஷ்ணனுடைய அண்ணன்.

உன்னுடைய உன்	பெயர் என்ன ?
என் என்னுடைய	பெயர் ராமசாமி.

உன்னுடைய ஊர் எது ?

என்னுடைய ஊர் காஞ்சீபுரம்.

இது என் கை.

அது உன் புத்தகம்.

உன் புத்தகம் என் கையில் இருக்கிறது.

பேனு எங்கே இருக்கிறது ?

பேனு கையில் இருக்கிறது.

பேனு யாருடைய கையில் இருக்கிறது ?

அது உங்கள் கையில் இருக்கிறது.

என் பேனு உன் கையில் இருக்கிறது.

புத்தகம் மேஜைமேல் இருக்கிறது.

அது யாருடைய புத்தகம் ?

புத்தகம் மேஜைமேல் இருக்கிறதா ?

இல்லை, அது உங்கள் கையில் இருக்கிறது.

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh. Funding by IKS-MoE-2025-Grant

(4) நாலாம் பாடம்

ராமா, புத்தகத்தை எடு.

(நீ) பாடம் படி.

நீ என்ன செய்கிருய் ?

நான் பாடம் படிக்கிறேன்.

சீதா, நீ என்ன செய்கிருய் ?

நான் கதை படிக்கிறேன்.

நீங்கள் என்ன செய்கிறீர்கள் ?

நீங்கள் எங்கே போகிறீர்கள் ?

கோபாலா, நீ பாடம் எழுது.

கோபாலன் என்ன செய்கிருன் ?

அவன் பாடம் எழுதுகிருன்.

கமலம் என்ன செய்கிருள் ?

அவள் விளையாடுகிருள்.

அவள் பாட்டு பாடுகிருள்.

அவள் கோலம் போடுகிருள்.

அப்பா எங்கே இருக்கிருர் ?

அவர் உள்ளே இருக்கிருர்.

அவர் பத்திரிகை படிக்கிருர்.

குழந்தை அழுகிறது.

* * *

நான் காலையில் எழுந்திருக்கிறேன்.

நான் பல் தேய்க்கிறேன்.

நான் முகம் கழுவுகிறேன்.

நான் கடவுளை வணங்குகிறேன்.

நான் பால் சாப்பிடுகிறேன்.

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh. Funding by IKS-MoE-2025-Grant

நான் பாடம் படிக்கிறேன்.

நான் குளிக்கிறேன்.

நான் சாதம் சாப்பிடுகிறேன்.

நான் பள்ளிக்கூடம் போகிறேன்.

(5) ஐந்தாம் பாடம்

கோவிந்தா, உன் ஊரில் பள்ளிக்கூடம் இருக்கிறதா ?

என் ஊரில் இரண்டு பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன.

ஒன்று பையன்களுக்காக.

இன்னொன்று பெண்களுக்காக.

பள்ளிக்கூடத்தில் தோட்டம் இருக்கிறது.

தோட்டத்தில் மரங்கள் இருக்கின்றன.

அவைகளில் பழங்கள் இருக்கின்றனவா ?

நீ எத்தனை மணிக்கு பள்ளிக்கூடம் போகிறாய் ?

நான் பத்து மணிக்கு போகிறேன்.

நீ எந்த வகுப்பில் படிக்கிறாய் ?

நான் ஆறும் வகுப்பில் படிக்கிறேன்.

உன் தங்கை ?

அவள் நாலாம் வகுப்பில் படிக்கிறாள்.

நீங்கள் (இருவரும்) பள்ளிக்கூடத்திற்கு எப்படி போகிறீர்கள் ?

நாங்கள் நடந்து போகிறோம்.

* * *

ராமா, உனக்கு என்ன வேண்டும் ?

அப்பா, எனக்கு ஐந்து ரூபாய்கள் வேண்டும்.

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh. Funding by IKS-MoE-2025-Grant

எதற்காக ?

புத்தகங்கள் வாங்க வேண்டும்.

மாமா, உங்களுக்கு வெந்நீர் வேண்டுமா ?

எனக்கு வெந்நீர் வேண்டாம்.

தண்ணீர் போதும்.

(6) ஆரும் பாடம்

ராமா, புத்தகம் எங்கே இருக்கிறது ?

அது பையில் இருக்கிறது.

பையிலிருந்து புத்தகத்தை எடு.

அதை கோவிந்தனிடம் கொடு.

கோவிந்தா, புத்தகத்தை மேஜைமேல் வை.

* * * *

உன் வீட்டிலிருந்து பள்ளிக்கூடம் எத்தனை தூரம் ?

இரண்டு மைல் (தூரம்).

நீ வீட்டிலிருந்து எத்தனை மணிக்கு புறப்படுகிருய் ?

நான் ஒன்பது மணிக்கு புறப்படுகிறேன்.

நீ எப்படி போகிருய் ?

பஸ்ஸில் போகிருயா, அல்லது நடந்து போகிருயா ?

நான் பஸ்ஸில் போகிறேன்.

பஸ் தபால் ஆபீஸ் எதிரில் நிற்கிறது.

நான் அங்கிருந்து நடந்து போகிறேன்.

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh. Funding by IKS-MoE-2025-Grant

உன் தகப்பனுர் ஆபீஸிலிருந்து வீட்டுக்கு எத்தனை மணிக்கு வருகிறுர் ?

அவர் ஐந்து மணிக்கு வருகிறுர்.

* * * *

நான் கடிதம் எழுதுகிறேன்.

நான் பேனுவால் எழுதுகிறேன்.

நாம் காலால் நடக்கிறேம்.

நாம் கண்களால் பார்க்கிறேம்.

நாம் கைகளால் வேலை செய்கிறேம்.

* * * *

நாம் வாயால் பேசுகிறேம்.

நாம் வாயால் சாப்பிடுகிறேம்.

ராமனை கூப்பிடு.

பேனுவை ராமனுக்கு கொடு.

புத்தகத்தை மூடு.

பையில் வை.

புத்தகங்களை பெட்டியிலிருந்து எடு.

அவைகளை பையில் வை.

வீட்டுக்கு போ.

நாச்தா சாப்பிடு.

மைதானத்தில் விளையாடு.

ஆறு மணிக்கு வீட்டுக்கு திரும்பி வா.

பாடங்களை படி, சாதம் சாப்பிடு.

ஒன்பது மணியிலிருந்து ஐந்து வரை தூங்கு.

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh. Funding by IKS-MoE-2025-Grant

(7) ஏழாம் பாடம்

படத்தை பார்.

படத்தில் ஒருவன் வயலில் வேலை செய்கிறான்.

அவன் குடியானவன்.

அவன் கிராமத்தில் வசிக்கிறான்.

வயலில் நெல், கோதுமை, கரும்பு, துவரை முதலியன விளைகின்றன.

*   *   *   *

இந்த படத்தை பார்.

படத்தில் ஒரு மனிதன் இருக்கிறான்.

அவன் என்ன செய்கிறான்?

அவன் துணி துவைக்கிறான்.

அவன் வண்ணான்.

வண்ணான் வாரம் ஒரு முறை வருகிறான்.

அழுக்கு துணிகளை எடுத்து போகிறான்.

அவைகளை துவைத்து (வெளுத்து) கொண்டு வருகிறான்.

*   *   *   *

இவன் தச்சன்.

இவன் மரவேலை செய்கிறான்.

இவனும் கிராமத்தில் வசிக்கிறான்.

இவனுக்கு ஒரு நாள் கூலி மூன்று ரூபாய்கள்.

பட்டணத்தில் தச்சனுக்கு தினம் ஐந்து ரூபாய் கூலி.

தில்லியில் பஞ்சாபி தச்சன் தினம் பத்து பதினைந்து ரூபாய் சம்பாதிக்கிறான்.

*   *   *   *

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh. Funding by IKS-MoE-2025-Grant

இது குதிரை வண்டி.
ஒருவன் வண்டி ஓட்டுகிறான்.
குதிரை வண்டியை இழுக்கிறது.
அது வேகமாக ஓடுகிறது.
குதிரை புல் தின்கிறது ; தண்ணீர் குடிக்கிறது.

(8) எட்டாம் பாடம்

உன் வகுப்பில் எத்தனை மாணுக்கர்கள் இருக்கிருர்கள் ?

முப்பது மாணுக்கர்கள் இருக்கிருர்கள்.

ஆசிரியர் எதில் உட்காருகிருர் ?

அவர் நாற்காலியில் உட்காருகிருர்.

பையன்கள் ?

ஒவ்வொரு பையனுக்கு ஒரு சிறிய நாற்காலியும் ஒரு டெஸ்கும் உண்டு.

நாங்கள் நாற்காலியில் உட்காருகிறோம் ; புத்தகங்களை டெஸ்கில் வைக்கிறோம்.

உன் பள்ளியில் பெண்கள் படிக்கிருர்களா ?

இல்லை, அவர்களுக்கு வேறு பள்ளிக்கூடம் இருக்கிறது.

அதில் என் அக்காளும் தங்கையும் படிக்கிருர்கள்.

வகுப்பில் உனக்கு என்ன என்ன கற்பிக்கிருர்கள் ?

தமிழ், ஹிந்தி, இங்கிலீஷ், கணக்கு, பூகோளம், சரித்திரம் முதலியன கற்பிக்கிருர்கள்.

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh. Funding by IKS-MoE-2025-Grant

கை வேலை உண்டா?

கொஞ்சம் உண்டு.

நாங்கள் வாரத்தில் மூன்று நாள் தக்ளியில் நூற்கிறோம்.

உங்கள் பள்ளியில் விளையாட்டு உண்டா?

நிறைய உண்டு.

பெரிய மைதானம் இருக்கிறது.

அதில் சாயங்காலம் நாங்கள் கிரிகெட், புட்பால் எல்லாம் விளையாடுகிறோம்.

எல்லோரும் விளையாடுகிறார்களா?

இல்லை, சில பையன்கள் விளையாடுவது இல்லை.

பள்ளிக்கூடம் முடிந்த உடன் நேரே வீட்டுக்கு போகிறார்கள்.

உங்கள் வாத்தியார் பையன்களை அடிக்கிறாரா?

இல்லை, அடிக்கிறதில்லை.

அவர் மிகவும் நல்லவர்.

(9) ஒன்பதாம் பாடம்

இலை பச்சை.

கிளி பச்சை.

கிளி பச்சை நிறம்.

முயல் என்ன நிறம்?

முயல் வெள்ளை.

பொன்னின் நிறம் மஞ்சள்.

வெள்ளி வெள்ளை.

காகிதமும் வெள்ளை.

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh. Funding by IKS-MoE-2025-Grant

மையின் நிறம் என்ன ?

மை கறுப்பு.

நாம் கறுப்பு மையால் வெள்ளை காகிதத்தில் எழுதுகிறோம்.

* * * *

சூரியன் கிழக்கில் உதிக்கிறது.

சூரியன் மேற்கில் மறைகிறது.

இமயமலை வடக்கில் இருக்கிறது.

கன்யாகுமாரி தெற்கில் இருக்கிறது.

இந்தியாவின் மேற்கு, தெற்கு, கிழக்கு—மூன்று திசைகளிலும் கடல் இருக்கிறது.

* * * *

ஏழு நாள் ஒரு வாரம் ஆகிறது.

நாலு (நான்கு) வாரங்கள் ஒரு மாதம் ஆகிறது.

ஒரு மாதத்துக்கு முப்பது நாட்கள்.

பன்னிரண்டு மாதங்கள் ஒரு வருஷம் (ஆண்டு) ஆகிறது.

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh. Funding by IKS-MoE-2025-Grant

(10) பத்தாம் பாடம்

நான் ராமன். நான் ஒரு பையன். நான் பள்ளிக்கூடத்தில் படிக்கிறேன். நீ எந்த வகுப்பில் படிக்கிருய்? நான் எட்டாம் வகுப்பில் படிக்கிறேன். இவன் என்னுடைய தம்பி. இவன் பெயர் கோபாலன். இவனும் என் பள்ளியில் படிக்கிருன்.

இது எங்கள் வீடு. இது பெரிய வீடு. நாங்கள் இதில் வசிக்கிரும். வீட்டுக்கு எதிரில் மரம் இருக்கிறது. மரத்தில் பழம் இல்லே.

எங்கள் வீட்டில் ஒரு நாய் இருக்கிறது. நாங்கள் அதை வளர்க்கிரும். அதற்கு பால் கொடுக்கிரும். அது சோறு தின்கிறது. நாய்க்கு நான்கு கால்கள். உன் வீட்டில் பூனே இருக்கிறதா? அது வெள்ளே நிறம். அது பால் குடிக்கிறது.

கோபாலா, அங்கே பார். உன் ஆசிரியர் வரு கிருர். அவரை உள்ளே கூப்பிடு. நாற்காலியில் உட்காருங்கள். பால் கொண்டு வருகிறேன். எனக்கு பால் வேண்டாம். வெந்நீர் கொண்டுவா. அப்பா வீட்டில் இருக்கிருரா? இல்லே, சனிக்கிழமை ஊரி லிருந்து வருகிருர்.

இது எங்களுடைய பள்ளிக்கூடம். இதில் பத்து வகுப்புகள் இருக்கின்றன. பள்ளிக்கூடம் காலேயில் பத்து மணி முதல் ஒரு மணி வரை; மாலேயில்

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh. Funding by IKS-MoE-2025-Grant

இரண்டு முதல் நாலு மணி வரை. ஆசிரியர்கள் எங்களுக்கு கற்பிக்கிருர்கள். நாங்கள் பாடங்கள் படிக்கிறோம். சாயங்காலம் மைதானத்தில் விளையாடு கிறோம். ஆறு மணிக்கு வீட்டுக்கு திரும்பி வருகிறோம்.

உன் பெயர் என்ன? உனக்கு எத்தனை தம்பி கள்? மனிதனுக்கு எத்தனை கண்கள்? சிவனுக்கு? நீ எதால் எழுதுகிருய்? உன் துணி என்ன நிறம்? வாரத்துக்கு எத்தனை நாட்கள்? (நாள் + கள்). உனக்கு கிழமைகளின் பெயர் தெரியுமா? வண்ணன் எந்த கிழமை வருகிருன்?

இது எங்கள் ஊர் (கிராமம்). ஊரில் நூறு வீடுகள் உண்டு. குடியானவர்கள் வயலில் வேலை செய்கிருர்கள். ஊரில் ஒரு வண்ணனும் இரண்டு தச்சர்களும் இருக்கிருர்கள். வயலில் என்ன என்ன விளைகிறது? எங்கள் ஊரில் குதிரை இல்லை.

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh. Funding by IKS-MoE-2025-Grant

இரண்டாம் சரணம்

(11) பதினோராம் பாடம்

நான் சனிக்கிழமை கடைதெருவுக்கு போனேன்.

ஏன் போனாய்?

சில சாமான்கள் வாங்க போனேன்.

என்னுடன் என் மாமா வந்தார்.

உங்களுடன் உன் தம்பி வந்தானா?

இல்லை, அவன் வரவில்லை.

நீங்கள் எத்தனை மணிக்கு வீட்டிலிருந்து புறப்பட்டீர்கள்?

நாங்கள் மாலை நாலு மணிக்கு புறப்பட்டோம்.

வழியில் என் சிநேகிதன் ராஜகோபாலனை பார்த்தேன்.

அவனும் கடைக்கு வந்தான்.

அவன் புத்தகங்கள் வாங்க வந்தான்.

அவன் என்ன என்ன புத்தம் வாங்கினான்?

ஒரு கணக்கு புத்தகம், ஒரு தமிழ் புத்தகம், இரண்டு நோட்டுகள் வாங்கினான்.

புத்தகங்களின் விலை நாலு ரூபாய் ஐம்பது பைஸா ஆயிற்று.

அவன் கடைக்காரனுக்கு ஐந்து ரூபாய் கொடுத்தான்.

கடைக்காரன் ஐம்பது பைஸா திருப்பி கொடுத்தான்.

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh. Funding by IKS-MoE-2025-Grant

நானும் மாமாவும் வீட்டு சாமான்கள் வாங்கிேனும்.

அரிசி, பருப்பு, காப்பிக்கொட்டை, சர்க்கரை, வெல்லம், தேங்காய் முதலியன.

நீ புத்தகம் வாங்கிஞயா ?

இல்லை, நான் புத்தகம் வாங்கவில்லை.

நான் ஸாமான்களை எடுத்துக்கொண்டு வண்டியில் வீட்டுக்கு வந்தேன்.

அந்த வண்டியில் என்னேடு ராஜகோபாலனும் வந்தான்.

நான் ஆறு மணிக்கு வீடு வந்து சேர்ந்தேன்.

மாமா வண்டியில் வரவில்லையா ?

மாமா கடையிலிருந்து நேராக கோவிலுக்கு போஞர்.

அவர் ஏழு மணிக்கு வீடு வந்து சேர்ந்தார்.

நான் ஒரு மணி நேரம் பாடம் படித்தேன்.

நாங்கள் எட்டு மணிக்கு சாப்பிட்டோம்.

ஒன்பது மணிக்கு ரேடியோவில் சமாசாரங்கள் கேட்டேன்.

அதன் பிறகு தூங்கினேன்.

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh. Funding by IKS-MoE-2025-Grant

(12) பன்னிரண்டாம் பாடம்

நான் நாளைக்கு ஸ்டேஷன் போவேன்.

நீ எப்போது போவாய்?

வண்டி பன்னிரண்டு மணிக்கு வரும்.

நான் அரை மணி முன்னால் போவேன்.

என் உடன் என் தங்கை கமலம் வருவாள்.

நாளை யார் வருவார்?

நாளை ஜீ. டீ.-யில் என் சித்தப்பா வருகிறார்.

அவரை அழைத்து வர நாங்கள் போவோம்.

உன் சித்தப்பாவுக்கு டில்லியில் வேலையா?

ஆம், அவர் அங்கே கம்பனியில் வேலை பார்க்கிறார்.

அவருடன் யார் யார் வருவார்கள்?

சித்தியும் அவர்களுடைய பிள்ளை ராமுவும் வருவார்கள்.

* * * *

நீ நேற்று ஸ்டேஷன் போனாயா?

போனேன். வண்டி சரியான சமயத்தில் வந்தது.

நாங்கள் டாக்ஸியில் வீட்டுக்கு வந்தோம்.

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh. Funding by IKS-MoE-2025-Grant

சித்தப்பா உனக்கு என்ன வாங்கி கொண்டு வந்தார் ?

அவர் எனக்கு விளையாட்டு ஸாமான்கள், புத்தகங்கள், ஒரு கேரம் போர்டு வாங்கி கொண்டு வந்தார்.

சித்தி பக்ஷணங்கள் கொண்டு வந்தாள்.

* * * *

அவர்கள் எத்தனை நாட்கள் சென்னையில் தங்குவார்கள் ?

பத்து நாள் தங்குவார்கள்.

அவர்களை கடல் கரைக்கு அழைத்து போவேன்.

பட்டணம் சுற்றிக் காட்டுவேன்.

பிறகு அவர்கள் எங்கே போவார்கள் ?

சித்தப்பா எங்கள் கிராமத்துக்கு போவார்.

சித்தி அவளுடைய அப்பா அம்மாவை பார்க்க மாயூரம் போவாள்.

ராமு சித்தியுடன் போவான்.

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh. Funding by IKS-MoE-2025-Grant

(13) பதிமூன்றும் பாடம்

	தினம்	நேற்று	நாளைக்கு
ராமன் காலையில் ஐந்து மணிக்கு படுக்கையிலிருந்து	எழுந்திருக்கிறான்	எழுந்தான்	எழுந்திருப்பான்
முகம்	கழுவுகிறான்	கழுவினான்	கழுவுவான்
பல்	தேய்க்கிறான்	தேய்த்தான்	தேய்ப்பான்
கடவுளை	வணங்குகிறான்	வணங்கினான்	வணங்குவான்
சூடான பால்	சாப்பிடுகிறான்	சாப்பிட்டான்	சாப்பிடுவான்
ஒரு மணி வீட்டு வேலைகளும், ஒரு மணி பள்ளிக்கூட வேலையும்	செய்கிறான்	செய்தான்	செய்வான்
வெந்நீரில்	குளிக்கிறான்	குளித்தான்	குளிப்பான்
சாதம் சாப்பிட்டு பத்து மணிக்கு பள்ளிக்கூடம் போய்	சேருகிறான்	சேர்ந்தான்	சேருவான்
பத்து முதல் ஒரு மணி வரை, பிறகு இரண்டு முதல் நாலு மணி வரை வகுப்புகளில் பாடங்கள்	கற்கிறான்	கற்றான்	கற்பான்
மாலையில் ஒரு மணி பையன்களோடு	விளையாடுகிறான்	விளையாடினான்	விளையாடுவான்
ஆறு மணிக்கு வீட்டிற்கு திரும்பி	வருகிறான்	வந்தான்	வருவான்
எட்டு மணிக்கு எல்லோருடன்	சாப்பிடுகிறான்	சாப்பிட்டான்	சாப்பிடுவான்
ஒன்பது மணிக்கு	தூங்குகிறான்	தூங்கினான்	தூங்குவான்

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh. Funding by IKS-MoE-2025-Grant

(14) பதினான்காம் பாடம்

ராமனை கூப்பிடு.

அவன் வீட்டில் இல்லை.

அவன் எங்கே போய் இருக்கிறான் ?

அவன் கடைக்கு போய் இருக்கிறான்.

கடையில் பண்டங்கள் வாங்க போய் இருக்கிறான்.

நாராயணனுடைய வீடு எங்கே இருக்கிறது ?

அவன் வீடு கிராமத்தில் இருக்கிறது.

நீ அந்த வீட்டை பார்த்து இருக்கிறாயா ?

ஆம், பார்த்து இருக்கிறேன்.

அது சிறிய வீடு.

ஆனால், நாலு பக்கமும் பெரிய தோட்டம் இருக்கிறது.

*　　*　　*　　*

அப்பா வெளி ஊர் போய் இருக்கிறார்.

அவர் நாளைக்கு திரும்பி வருவார்.

நீ இந்த புத்தகம் படித்து இருக்கிறாயா ?

என்னுடைய பெரியப்பா மதுரையிலிருந்து நேற்று வந்திருக்கிறார்.

அவருடன் அவர் பெண் மீனாக்ஷியும் வந்து இருக்கிறாள்.

அவர்கள் இருவரும் சில நாட்கள் எங்களுடன் தங்குவார்கள்.

*　　*　　*　　*

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh. Funding by IKS-MoE-2025-Grant

ஒரு அரசன் இருந்தான்.

அவன் பெயர் தசரதன்.

அவனுக்கு மூன்று மனைவிகள் இருந்தார்கள்.

நாலு பிள்ளைகள் இருந்தார்கள்.

ஜனகருக்கு ஒரு பெண் இருந்தாள்.

அவள் பெயர் சீதை.

சீதை அசோக வனத்தில் சுமார் ஒரு வருஷம் இருந்தாள்.

* * * *

புதன் கிழமை நீ வீட்டில் இருந்தாயா ?

விளையாட்டு எப்படி இருந்தது ?

நன்றாக இருந்தது.

பழங்கள் இனிப்பாக இருந்தன.

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh. Funding by IKS-MoE-2025-Grant

(15) பதினைந்தாம் பாடம்

அப்பா எங்கே ?

அவர் உள்ளே இருக்கிறார்.

அவர் என்ன செய்துகொண்டு இருக்கிறார் ?

அவர் கடிதம் எழுதிக்கொண்டு இருக்கிறார்.

அம்மா என்ன செய்து கொண்டிருக்கிறாள் ?

அவள் சமைத்துக்கொண்டு இருக்கிறாள்.

அண்ணா தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருக்கிறான்.

தங்கை பாடம் படித்துக்கொண்டு இருக்கிறாள்.

குழந்தை அழுதுகொண்டு இருக்கிறது.

பையன்கள் தெருவில் விளையாடிக்கொண்டு இருக்கிறார்கள்.

* * * *

மாலை நேரம்.

பள்ளிக்கூடத்திலிருந்து பையன்கள் தங்கள் வீட்டுக்குத் திரும்பி வந்துகொண்டிருந்தார்கள்.

நானும் எல்லோருடனும் நடந்து வந்துகொண்டிருந்தேன்.

தெருவில் ஸைக்கிள்கள், வண்டிகள் வந்து போய்க்கொண்டிருந்தன.

ஜனங்கள் கடைகளில் சாமான்கள் வாங்கிக் கொண்டு இருந்தார்கள்.

சிலர் கைவண்டியில் அநேக ஸாமான்களை விற்றுக்கொண்டு இருந்தார்கள்.

சத்தம் அதிகம் இருந்தது.

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh. Funding by IKS-MoE-2025-Grant

(16) பதினாரும் பாடம்

நாம் பசு, காளை, குதிரை, நாய், பூனை, ஆடு முதலிய மிருகங்களை நமது வீட்டில் வளர்க்கிறோம். இவைகள் எல்லாம் வீட்டு மிருகங்கள். இவை மனிதனுக்கு மிகவும் உபயோகம் ஆனவை.

பசு இனிய பால் தருகிறது. எருது வயலில் ஏர் உழுகிறது; வண்டி இழுக்கிறது. நாய் நமது வீட்டைக் காக்கிறது.

ஆட்டை ஏழைகளின் பசு என்று சொல்லுகிறார்கள். ஏழை ஜனங்கள் அதன் பாலை சாப்பிடுகிறார்கள். காந்திஜியும் ஆட்டுப் பால் தான் சாப்பிட்டார். ஆடு வளர்க்க செலவு அதிகம் இல்லை.

குதிரை வண்டி இழுக்கிறது. அதன் மேல் ஏறி சவாரி செய்கிறார்கள். அது மிகவும் வேகமாக ஓடுகிறது. எல்லா பெரிய ஊர்களிலும் குதிரை வண்டி உண்டு.

இந்த மிருகங்கள் நம்முடைய அநேக வேலைகளில் உதவி செய்கின்றன. இவைகளை அன்புடன் பாதுகாக்க வேண்டும். இவைகளை தம் வசமாக்க மனிதனுக்கு அநேக ஆயிரம் ஆண்டுகள் ஆயிற்று.

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh. Funding by IKS-MoE-2025-Grant

சிங்கம் வனத்துக்கு (காட்டுக்கு) ராஜா. சிங்கமும் புலியும் மற்ற மிருகங்களை கொன்று அவைகளுடைய மாமிசத்தை தின்கின்றன. மிருகங்களில் மிகப் பெரியது யானை.

மிருகங்களுக்கு நான்கு கால்கள் உண்டு, ஒரு வாலும் உண்டு. சில மிருகங்களுக்கு தலையில் இரண்டு கொம்புகள் உண்டு—பசு, எருது, ஆடு, எருமை. மானின் கொம்புகள் மிக அழகு. குதிரைக்கு கொம்பு இல்லை. இறந்த பிறகும் மிருகங்களுடைய தோல், கொம்பு, எலும்பு முதலியவை உபயோகம் ஆகின்றன.

(17) பதினேழாம் பாடம்

இந்திரனும் நாரதரும்

(பாரதி)

தேவ சேவகன் : தேவ தேவா !

இந்திரன் : சொல்.

தே. சே : வெளியே நாரதர் வந்து காத்து இருக்கிறார்.

இ. : வருக !

நாரதர் : (பாடிக்கொண்டு வருகிறார்.) "நாராயணா, நாராயணா !"

இ. : நாரதரே, நாராயணன் எங்கே இருக்கிறான் ?

நா. : நீ அவனை பார்த்தது இல்லையா ?

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh. Funding by IKS-MoE-2025-Grant

இ. : இல்லை.

நா. : சர்வ பூதங்களிலும் இருக்கிருன்.

இ. : நரகத்தில் இருக்கிருனு ?

நா. : ஆம்.

இ. : துன்பத்தில் இருக்கிருனு ?

நா. : ஆம்.

இ. : உங்களுடைய சர்வநாராயண சித்தாந்தத்தின் துணிபு யாது ?

நா. : எல்லா வஸ்துக்களும், எல்லா லோகங்களும், எல்லா தன்மைகளும், எல்லா சக்திகளும், எல்லா ரூபங்களும் ஒன்றுக்கு ஒன்று சமம்.

இ. : நீரும் கழுதையும் சமானந்தானு ?

நா. : ஆம்.

இ. : ஞானமும் அஞ்ஞானமும் சமானமா ?

நா. : ஆம்.

இ. : அது எப்படி ?

நா. : சர்வம் விஷ்ணுமயம் ஜகத்.

(பாடுகிருர்)

" நாராயண, நாராயண, நாராயண."

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh. Funding by IKS-MoE-2025-Grant

மூன்றும் சரணம்

1. பேராசை பெருநஷ்டம்

ஒரு ஊரில் ஒரு குடியானவன் இருந்தான். அவனிடம் ஒரு வாத்து இருந்தது. அது ஒவ்வொரு நாளும் ஒரு தங்க முட்டை இட்டது. அந்த முட்டையை விற்று வீட்டு சாமான்கள் வாங்கி குடியானவன் இன்பமாக வாழ்ந்தான்.

ஒரு நாள் அவன் மனதில் ஒரு கெட்ட எண்ணம் தோன்றிற்று: 'இந்த வாத்தின் வயிற்றில் அநேக தங்க முட்டைகள் இருக்கின்றன. அவைகளை எல்லாம் நாளைக்கு வெளியே எடுக்கிறேன். அதனால் எனக்கு மிகுந்த பணம் கிடைக்கும். நான் சீக்கிரமே பணக்காரன் ஆவேன்.'

அடுத்த நாள் காலையில் அவன் ஒரு கூர்மையான கத்தி எடுத்து வந்தான். வாத்தின் வயிற்றைக் கிழித்தான். ஆனால் உள்ளே ஒரே முட்டை தான் இருந்தது.

குடியானவன் மிகவும் வருந்தினான், அழுதான். ஆனால் என்ன பயன்? வாத்து இறந்து விட்டது.

"அதிக ஆசை அதிக நஷ்டம்" என்பது பழமொழி.

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh. Funding by IKS-MoE-2025-Grant

2. நரியும் திராக்ஷையும்

ஒரு சமயம் ஒரு நரிக்கு மிகவும் பசித்தது. அது இரை தேட புறப்பட்டது. வழியில் ஒரு திராக்ஷைத் தோட்டம் இருந்தது. உயரமான பந்த லில் படர்ந்து இருந்த கொடியில் திராக்ஷ பழங்கள் தொங்கிக்கொண்டிருந்தன. பழக் கொத்துகளைப் பார்த்து நரிக்கு வாயில் நீர் ஊற ஆரம்பித்தது. பழங்களை அடைய அது உயர தாவிற்று. ஆனால் பழங்கள் மிக உயரத்தில் இருந்தன.

நரி பலமுறை தாவிப் பார்த்தது. ஆயினும் பழம் ஒன்றுகூட கிடைக்கவில்லை. நரி மிகவும் களைத்துப்போயிற்று. கடைசியில் நரி, "சீ சீ இந்த பழம் புளிக்கும். இதை யார் சாப்பிடுவார்கள்?" என்று சொல்லிக்கொண்டு போயிற்று.

"எட்டாத பழம் புளிக்கும்" என்பது பழமொழி.

வரப்பு உயர நீர் உயரும் ;
நீர் உயர நெல் உயரும்.
நெல் உயர குடி உயரும் ;
குடி உயர கோல் உயரும்.

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh. Funding by IKS-MoE-2025-Grant

3. நமது தேசம்

நமது பாரத தேசம் மிகவும் பெரியது; மிகவும் பழயதும்கூட. வடக்கே இமய மலையும், பாக்கி மூன்று பக்கங்களில் கடலும் இருக்கின்றன. கங்கை, யமுனே, ஸத்லஜ், பிரமபுத்ரா, நர்மதை முதலிய பெரிய ஆறுகள் வட இந்தியாவில் பாய்கின்றன. கோதாவரி, கிருஷ்ணு, காவேரி மூன்றும் தென் நாட்டின் பெரிய ஆறுகள். தில்லி தலை நகரம். பம்பாய், கல்கத்தா, கான்பூர் இவைகள் பெரிய வியாபார பட்டணங்கள். ஹரித்வாரம், காசி, பிரயாகை, பூரி-ஜகந்நாதம், காஞ்சி, ராமேச்வரம், துவாரகை முதலிய இடங்களுக்கு ஜனங்கள் யாத்திரை போகிருர்கள்.

சுமார் இருநூறு ஆண்டுகள் ஆங்கிலேயர்கள் இங்கே அரசு புரிந்தார்கள். அதற்கு முன் எண்ணூறு வருடங்கள் முஹம்மதிய அரசர்கள் ஆட்சி செய்தார்கள். அதற்கும் முன் அநேக ஆயிரம் ஆண்டுகள் இந்நாட்டு மன்னர்களே அரசு புரிந்தார்கள். புராணங்களில் நமது பாரத தேசத்தின் ஐம்பத்தாறு ராஜ்யங்களுடைய பெயர்கள் கூறி இருக்கிறது: அங்க, வங்க, கலிங்க, காச்மீர, நேபாள, சேர, சோழ, பாண்டிய முதலியன.

முஹம்மதியர் காலத்தில் நமது தேசத்துக்கு ''ஹிந்த்'', ''ஹிந்துஸ்தான்'' என பெயர் வந்தது.

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh. Funding by IKS-MoE-2025-Grant

அது ஆங்கிலேயர்கள் காலத்தில் "இந்தியா" என மாறிற்று. நமது தேசத்தில் பல மொழிகள் இருக்கின்றன; பல தர்மங்கள் இருக்கின்றன. ஜனங்களின் பாஷை, வேஷம், பழக்க வழக்கங்கள் வேறு வேறு. ஆயினும் இதை எல்லோரும் ஒரே தேசம், நமது தேசம் என கருதுகிறார்கள்.

4. தமிழ் நாடு

நமது பாரத தேசத்தின் தென் பாகத்தில் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம்—இந்த நான்கு பாஷைகள் பேசும் ஜனங்கள் வசிக்கிறார்கள். இந்த மொழிகள் வட நாட்டு பாஷைகளிலிருந்து வித்தியாசம் ஆனவை. தமிழ் நாடு இந்தியாவின் தென் கோடியில் உள்ளது. அதை மதராஸ் மாகாணம் எனவும் சொல்லுகிறார்கள். ஆனால் அது பழைய பெயர். ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் ஆந்தரா, தமிழ் நாடு, கர்நாடகம், கேரளம்—இந்த நான்கும் சேர்ந்து ஒரே மதராஸ் ராஜ்யமாக இருந்தது.

தமிழ் நாட்டு ஜில்லாக்கள் பதினொன்று: செங்கல்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, ராமனாதபுரம், திருநெல்வேலி, சேலம், கோயமுத்தூர், நீலகிரி. தமிழ் நாட்டில் பாயும் முக்கிய ஆறுகள் காவேரி, தென்பெண்ணை, பாலாறு, வைகை, தாம்பிரபரணி.

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh. Funding by IKS-MoE-2025-Grant

இந்த ஆறுகள் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி பாய்கின்றன.

தமிழ் நாட்டுக் கோவில்கள் மிகவும் பெரியவை. கோவிலின் நான்கு வாயில்களிலும் உயரமான பெரிய பெரிய கோபுரங்கள் உண்டு. காஞ்சீபுரம், மதுரை, ராமேச்வரம், ஶ்ரீரங்கம், தஞ்சாவூர், சிதம்பரம்— இந்த ஊர் கோவில்கள் புகழ்பெற்றவை. ஶ்ரீரங்கம் கோவில் ஒரு பெரிய கோட்டை போன்றது. தமிழ் அரசர்கள் அரண்மனைக்கு பதிலாக பெரிய கோவில் களை கட்டினார்கள்.

தமிழ் நாடு பல்லாயிரம் வருடங்கள் நாகரிகம் அடைந்த தேசம். முன் காலத்தில் இது சேர, சோழ, பாண்டிய என மூன்று தனித்தனி நாடு களாக இருந்தது. மாகாணத்தின் தலை நகரம் சென்னை பட்டணம். ஆனால் இதை மதராஸ் என்று தான் சொல்லுகிறார்கள். தமிழ் நாட்டு மக்கள் தங்கள் ஆகாரத்தில் அரிசி அதிகம் உபயோகிக்கி றார்கள்.

பாண்டிச்சேரியில் உள்ள அரவிந்த ஆசிரமம், திருவண்ணாமலை ரமண ஆசிரமம், காஞ்சீபுரத்தில் சங்கராசார்ய மடம்—இவைகளை வட இந்தியாவில் பலர் அறிவார்கள். திருச்செங்கோடு காந்தி ஆசிரம மும் சிலருக்கு தெரியும்.

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh. Funding by IKS-MoE-2025-Grant

5. நீதி வாக்கியங்கள்

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.
ஆலயம் தொழுவது சாலவும் நன்று.
ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்.
உண்டிக்கு அழகு விருந்தோடு உண்டல்.
எண்ணும் எழுத்தும் கண் என தகும்.
கீழோராயினும் தாழ உரை.
சீரைத் தேடின் ஏரை தேடு.

*   *   *   *

கொடிது கொடிது வறுமை கொடிது ;
அதினின் கொடிது இளமையில் வறுமை.

6. ஜட்ஜின் குழப்பம்

ஒரு ஜட்ஜ் இருந்தார். கொலைக் குற்றம் செய்த அநேக கைதிகளுக்கு அவர் தூக்கு தண்டனை கொடுத்து வந்தார். அவருக்கு அதில் ஒரு தவறும் தோன்றவில்லை. பல ஆண்டுகள் இது நடந்து கொண்டு வந்தது.

ஒரு நாள் அவருடைய பிள்ளையே கொலை செய்ததாக அவர்முன் நிறுத்தப்பட்டான். அவன் கொலை செய்தது ருஜுவும் ஆயிற்று. ஜட்ஜ் அவர்களுக்கு தன் மகனுக்கே தூக்குத் தண்டனை விதிக்க வேண்டி வந்தது.

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh. Funding by IKS-MoE-2025-Grant

பாவம்! அவருக்கு மனம் வரவில்லை. தர்க்கம் செய்யத் தொடங்கினர்: "மரண தண்டனை மனிதனுக்கு ஒவ்வாதது. மனிதனுக்கு இந்த தண்டனை கொடுப்பது அழகல்ல. மனிதனை திருத்த முடியாமலே போகிறது" முதலிய தர்க்கங்கள் அவருடைய வாயிலிருந்து வந்தன.

ஆனால் அவைகள் எல்லாம் ஜட்ஜ் உடைய உள் நெஞ்சிலிருந்து வரவில்லை; 'இவன் என் மகன்' என்னும் மோகத்தால் வெளிவந்த கருத்துக்கள். இவ்வாறு அவர் மகன் இடையில் வந்து இருக்கா விட்டால் அவர் தனது ஆயுள் முழுவதும் தூக்கு தண்டனை கொடுத்துக்கொண்டே இருந்திருப்பார்.

கீதை முதலாவது அத்தியாயத்தில் அர்ஜுனன் இதே நிலையில்தான் இருந்தான்.

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh. Funding by IKS-MoE-2025-Grant

7. ஞானதேவரும் நாமதேவரும்

பக்தர்கள் இரண்டு விதம்: பலனை விரும்புகிற பக்தன், பலனை விரும்பாதவன். கடவுளிடமே எல்லாம் கேட்பது ஒரு பெரிய விஷயம்.

ஞானதேவர் ஒரு முறை நாமதேவரை கேட்டார், "நீ யாத்திரைக்கு வருகிறாயா?" நாமதேவர் கேட்டார், "யாத்திரை ஏன் (எதற்காக)?"

ஞானதேவர் சொன்னார்: "நல்ல சாதுக்களை சந்திக்கலாம்." நாமதேவர், "கடவுளை கேட்டு வருகிறேன்" என்று சொல்லிப் போனார்.

நாமதேவர் கோவிலுக்குப் போய் தெய்வத்தின் முன் நின்றார். கண்களில் நீர் பெருகியது; கடவுளின் பாதத்தையே பார்த்து வெகு நேரம் நின்று கொண்டிருந்தார். பிறகு கேட்டார், "ஏ தேவனே, நான் யாத்திரைக்கு போகலாமா"?

இந்த நாமதேவரை பைத்தியம் என்று சொல்ல லாமா? தேவனிடம் அழுது கேட்பவன் பலனை விரும்புகிறவன் ஆயினும் பெரியவன். மனிதன் யாரிடம் யாசிக்கிறான் என்பது முக்கிய விஷயம்.

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh. Funding by IKS-MoE-2025-Grant

8. வேலைக்காரன் சோம்பேறியா?

(விநோபாஜி)

நமது தேசத்தில் உழைப்பாளிகளுக்கு எட்டு மணி நேரத்தில் குறிப்பிட்ட அளவு வேலை செய்ய சக்தி இருக்கிறதா? இது இப்பொழுது நமது கேள்வி. எனது அனுபவம் கீழே கண்டவாறு உளது:

எனது ஆசிரமத்தில் நான் பத்து உழைப்பாளி களுக்கு நூற்பு கற்றுக்கொடுத்தேன். கூலியும் கொடுத்தேன். என் கணக்குப்படி அவர்கள் பதினாறு குஞ்சங்கள் நூற்கவேண்டும். அவர்கள் எம் முறையிலும் பன்னிரண்டு குஞ்சங்களுக்கு மேல் முன்னேறவில்லை.

அவர்களில் ஒருவனை நான் ஆசிரமத்திலேயே வைத்துக் கொண்டேன். மூன்று வேளைகளும் அவனுக்கு நல்ல உணவு கிடைத்தது. இரவில் அவனுக்கு நிம்மதியான தூக்கம் கிடைத்தது. ஒரு மாத இறுதியில் அவன் பதினாறு குஞ்சங்கள் நூற்க தொடங்கி விட்டான்.

இதில் அவனுடைய குற்றம் என்ன? குற்றம் முதலாளி, உழைப்பாளி இருவருடையதும் அல்ல. சூழ்நிலை மாற, வாழ்க்கை மாறும். அத்துடன் திறமை தானாகவே உயரும்.

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh. Funding by IKS-MoE-2025-Grant

9. சின்ன விஷயங்கள்

(ராஜாஜி)

வீட்டில் வந்து தயிர், பால், காய்கறி முதலிய பண்டங்களை விற்றுப்போகும் ஏழை ஜனங்களிடம் நடந்து கொள்வதிலும் பண்பாடு உண்டு. அவர்களை வேலைக்காரர்களாக எண்ணுவது தவறு.

ஒரு கிழவி தன் ஜீவனத்தை நடத்த அப்பளம் அல்லது அவல் செய்துகொண்டு வந்து தருகிறாள். " பாட்டி இன்று வேண்டாம் " அல்லது " வாருங்கள், உட்காருங்கள் " என்று சொல்லவேண்டும். இவ் வாறே எல்லோரிடமும் நடந்துகொள்ள வேண்டும்.

தங்கள் ஜீவனத்தை நடத்தவே பண்டங்களை விற்பவர்கள் வீடுவீடாய் சென்று பொறுமையுடன் நடந்துகொள்ளுகிறார்கள். ஆனால் தருமத்துக்கு பயந்து சமுதாயத் தொண்டும் செய்கிறார்கள். எந்த சாதியார் ஆயினும் தலையில் விறகுச் சுமை எடுத்து வருபவர்கள் வரையில், அவர்கள் எல்லோ ரும் ஸமுதாயத் தொண்டர்கள்; அவர்களுக்கும் நம்மைப்போல் குடும்பங்கள் உண்டு, எல்லா உணர்ச்சிகளும் உண்டு என்பதை அவர்களைக் காணும்போது நாம் மனதில் மறவாமல் வைத்துக் கொண்டு, அவர்களிடம் வியாபாரம் செய்ய வேண்டும்.

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh. Funding by IKS-MoE-2025-Grant

தயிர்க்காரி தன் பானையில் கொண்டுவந்த தயிரை விற்ற பிறகு தன் கிராமத்துக்கு திரும்பிப் போய் தன் குழந்தைகளை கவனிக்க வேண்டியவள். அவ்வாறு அவள் தன் வீட்டில் நுழையும்போது சிரித்துக்கொண்டு சந்தோஷமாக நுழையவேண்டும். அவள் அங்கே போனதும் அவளுடைய குழந்தைகள் எல்லாம் அவளை சுற்றிக் கொள்ளும். உலகம் கொடுமை ஆனது என்ற உணர்ச்சியுடன் அவள் வீடுபோனால் அந்த சாபம் நம்மை எரிக்கும்.

பண்பாடு உடைய குடும்பங்களில் பால், தயிர், காய்கறி, விறகு முதலிய பண்டங்களை தூக்கிவந்து விற்பவர்களை அன்புடன் வரவேற்று, கால தாமதம் செய்யாமல் வேலையை முடித்து அனுப்புவார்கள்; சந்தர்ப்பம் நேரிட்டபோது அவர்களுடைய சுகதுக்கங்களையும் விசாரிப்பார்கள். பண்பாடு பெருதவர்களுக்கு அவர்களுடைய பெயர்கூட தெரியாது. பால்க்காரன், தயிர்க்காரி என்று தான் பெயரில்லாமல் பேசுவார்கள்.

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh. Funding by IKS-MoE-2025-Grant

10. பாப்பா பாட்டு

(சுப்பிரமணிய பாரதி)

ஓடி விளையாடு பாப்பா—நீ
ஒய்ந்து இருக்கல் ஆகாது—பாப்பா
கூடி விளையாடு பாப்பா—ஒரு
குழந்தையை வையாதே பாப்பா.

பாலை பொழிந்து தரும் பாப்பா—அந்த
பசுமிக நல்லதடி பாப்பா
வாலை குழைத்து வரும் நாய்தான்—அது
மனிதர்க்கு தோழனடி பாப்பா.

வண்டி இழுக்கும் நல்ல குதிரை—நெல்லு
வயலில் உழுதுவரும் மாடு
அண்டிப் பிழைக்கும் நம்மை ஆடு—இவை
ஆதரிக்க வேணுமடி பாப்பா.

காலை எழுந்தவுடன் படிப்பு—பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுதும் விளையாட்டு—என்று
பழக்கப் படுத்திக் கொள்ளு பாப்பா.

பொய் சொல்லல் ஆகாது பாப்பா—என்றும்
புறஞ் சொல்லல் ஆகாது பாப்பா.
தெய்வம் நமக்கு துணை பாப்பா—ஒரு
தீங்கு வரமாட்டாது பாப்பா.

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh. Funding by IKS-MoE-2025-Grant

தமிழ்த்திரு நாடு தன்னை பெற்ற—எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா
செல்வம் நிறைந்த ஹிந்துஸ்தானம்—அதை
தினமும் புகழ்ந்திடடி பாப்பா.

வடக்கில் இமயமலை பாப்பா—தெற்கில்
வாழும் குமரிமுனை பாப்பா
கிடக்கும் பெரிய கடல் கண்டாய்—இதன்
கிழக்கிலும் மேற்கிலும் பாப்பா.

வேதம் உடையது இந்த நாடு—நல்ல
வீரர் பிறந்தது இந்த நாடு ;
சேதமில்லாத ஹிந்துஸ்தானம்—இதை
தெய்வமென்று கும்பிடடி பாப்பா.

சாதிகள் இல்லையடி பாப்பா—குல
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம் ;
நீதி, உயர்ந்த மதி, கல்வி—அன்பு,
நிறைய உடையவர்கள் மேலோர்.

உயிர்களிடத்தில் அன்பு வேணும்—தெய்வம்
உண்மை என்று தான் அறிதல் வேணும் ;
வயிரமுடைய நெஞ்சு வேணும்—இது
வாழும் முறைமை அடி பாப்பா.

CC-0. Agamnigam Digital Preservation Foundation, Chandigarh. Funding by IKS-MoE-2025-Grant